# அவசரக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2019 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் நாள் வியாழன் கிழமை மாலை 4.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் 1

அரசாணை ( நிலை) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 26.07.2018 ன் படி சொத்துவரி பொது சீராய்வு (General Revision of Properties) 01.04.2018 முதல் நகராட்சிகளில் அமுல்படுத்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டு கீழ்காணும் விபரப்படி வரி சீராய்வு சதவீதம் உயர்வு செய்து உத்தரவிடப்பட்டது : -

| வ.எ | விபரம் | சொத்துவரி சீராய்வு விபரம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50 % மிகாமல். |
| 2 | குடியிருப்பு வாடகை கட்டிடங்கள் | 100 % மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

தற்போது அரசாணை (நிலை) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA IV), நாள் 19.11.2019 ல் சொத்துவரி சீராய்வின் பொதுவான திருத்தத்திற்கான பிரதிநிதித்துவங்களை ஆராய்வதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணை ( நிலை) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 26.07.2018 அரசாணைகளை நிறுத்தி வைக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை (நிலை) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 19.11.2019 ஐ நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அரசாணை (நிலை) எண் 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 19.11.2019 ஐ பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 1036/2018/அ3 )

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**